நீதி அமைப்பில் குறை கிடையாது!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆனி மீ 22உ செவ்வாய் (6—7—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆனி மீ 23உ புதன் (7—7—54) | இதழ்: 19

வடநாட்டு அகதிகளின் குபேர வாழ்வு!

ஆள் ஒன்றுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் மான்யம்!

மத்திய சர்க்காரின் தாராளம்!

புதுடில்லி, ஜூலை 5—

மத்திய புனரமைப்பு அமைச்சர் இலாகா, பீகார் சர்க்காருக்கு, புதிதாக 9 லட்சம் ரூபாய் கிழக்கு வங்கத்திலிருந்து வந்த அகதிகளுக்கு விவசாய வேலைகளுக்கும், வீடுகள் கட்டவும் கடன் தரும் பொருட்டு மானியம் தந்திருக்கின்றனர்.

இது தவிர, இன்னும் பல மானியங்களை பீகார் சர்க்காருக்கு மத்திய சர்க்கார் அளித்திருக்கிறது; ஒரிசா மாகாணத்திற்கும் உதவி செய்யப்பட்டது.

13 குடும்பங்களுக்கு ரூ 25,000 ரொக்கமும், பூர்னியா மாவட்டத்தில் 43.76 ஏகர் நிலமும் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்தொகை மாடுகள் வாங்கவும், நிலத்தைச் சீர்படுத்தவும், விதைகள், உரங்கள் வாங்கவும் பயன்படுத்தப்படுமாம்.

காமேஸ்வரி எனும் பகுதியில் ஏழைகள் வீதியில் வசிக்கும் 10 குடும்பங்களுக்கும், சசாரம் எனும் பகுதியில் வசிக்கும் 28 அகதி குடும்பங்களுக்கும் தலைக்கு 1,800 வீதம் வீடுகள் கட்டிக் கொள்ளத் தரப்படும்.

டால்சோராவில் உள்ள கிழக்கு வங்க அகதி குடும்பங்களான 23 குடும்பங்களுக்கு ரூ 14,500 மானியம் தந்து உதவ சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

கட்டாக் நகரில் குடியிருக்கும் அகதிகள் குடும்பங்களின் பொருளாதார நிலைபற்றிய விவரங்களைச் சேகரித்தபோது ஏற்கனவே அந்த அகதிகளுக்கு அளிக்கப்பட்ட மானியங்களைத் தவிர்த்து, மீண்டும் தொழில் நடத்த 39 பேர்களுக்கு ரூ. 17,000 மானியம் தருவதென முடிவு செய்யப்பட்டது.

ஒரிசாவில் சார்பாதிபூரில் உள்ள அகதிகள் கழனி வீடுகளை பழுது பார்க்கவும், அவைகளுக்கு கூரை போடவும், ரூ. 16,000 அனுமதிக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

கிழக்கு வங்க கம்யூனிஸ்டு கட்சி

தடை செய்யப்பட்டது

கராச்சி, ஜூலை 5—

கிழக்கு வங்கத்தில பொது மக்களுக்கு ஆபத்தாக இருக்கிறதென்பதால் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டுவிட்டது.

1908-ம் ஆண்டு கிரிமினல் சட்டப்படி கிழக்கு பாகிஸ்தானில் உள்ள கம்யூனிஸ்டு கட்சி, அதன் உப கமிட்டிகள், கிளைகள் அனைத்தும் சட்ட விரோதமான ஸ்தாபனங்கள் என்று கவர்னர் அறிவித்திருப்பதாக தனி சர்க்கார் கெஜட் ஒன்று கூறுகிறது.

கிழக்கு வங்க சட்ட சபையில் 5 கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

தமிழ்நாடு "உழவர் கட்சி" ஆரம்ப விழா

4—7—54 ஞாயிறு அன்று திண்டிவனத்தில் திரு. வி. கோபால கவுண்டர் எம். எல் ஏ., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு உழவர் கட்சி ஆரம்ப விழா நடைபெற்றது.

உழைப்பாளர் கட்சி திடீரென காங்கிரசோடு உறவு கொண்டுவிட்டபடியால், பிற்பட்ட இனத்தாரின் நலனையும், ஆதிதிராவிடர்களின் நலனையும் பாதுகாக்க உழவர் கட்சி உருவாகியது.

வருகின்ற ஜில்லா போர்டு தேர்தல்களில் 'உழவர் கட்சி' போட்டியிடும்.

தேர்தலில் காங்கிரசையும், காங்கிரசுடன் இணைந்துள்ள உழைப்பாளர் கட்சியையும், எதிர்த்து 'உழவர் கட்சி' போட்டியிடும்.

'உழவர் கட்சி'யின் நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்:
வி. கோபால கவுண்டர், எம். எல். ஏ.,

உப தலைவர்கள்:
திருக்குறளார் முனுசாமி, எம். பி.,
ஆர். என். பெரியண்ண கவுண்டர், செஞ்சி
பி குழந்தை மூப்பனார், கள்ளக்குறிச்சி.

பொருளாளர்:
வீரப்ப கவுண்டர், திண்டிவனம்

செயலாளர்கள்:
ஏ கோவிந்தசாமி, எம் எல் ஏ,
எம். கே. இராமமூர்த்தி, எம். ஏ.,

லோகியா கைது

பத்தேகர், ஜூலை 5—

பிரஜா-சோஷலிஸ்டு தலைவர் டாக்டர் ராம்மனோகர் லோகியா பக்ருதாபாத்தில் 1932ம் ஆண்டு தனி அதிகாரங்கள் சட்டப்படி கைது செய்யப்பட்டார்.

உ. பி சர்க்காரின் நீர்ப்பாசன வரி உயர்வை எதிர்த்து லோகியா மக்களிடம் உயர்த்தப்பட்ட வரியினைக் கொடுக்க வேண்டாமென்று பேசினாராம்.

நண்பர் ஒருவரின் வீட்டில் உணவு அருந்தும்போது அவர் கைது செய்யப்பட்டார்.

உபரி தொகையாம்!

ஆஸ்திரேலிய சர்க்காரின் 1954-ம் ஆண்டின் வரவு-செலவு திட்டத்தில் 4,50,40,000 ஸ்டர்லிங் உபரி ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற செப்டம்பரில் வரவு-செலவுத் திட்டம் வெளியிடப்பட்டபோது 1,72,000 ஸ்டர்லிங்தான் உபரி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

திரு-கொச்சி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் கைது!

144 தடை உத்தரவை மீறினர்களாம்!

கோட்டயம், ஜூலை 5—

தேவிகுளத்தில் திரு-கொச்சி சர்க்காரின் 144 தடையுத்தரவை மீறியதாக இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. நேசமணி, ஏ. சிதம்பரநாத நாடார் எம் எல் ஏ, இந்திய மேல்சபை உறுப்பினர் அப்துல் ரசாக் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மூவரும் திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசின் தலைவர்களாவார்கள்.

கோட்டயம் ஜில்லா மாஜிஸ்திரேட் இவர்கள் மூவருக்கும் 6 வார வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள். மூவருக்கும் 'ஏ' வகுப்பு தரப்பட்டது.

இவர்கள் கைது செய்யப்பட்டதை ஒட்டி தமிழ் தாலுகாக்களில் கடையடைப்பும், நகர் கோவிலில் கண்டன ஊர்வலமும் நடைபெற்றதாம்.

தேவிகுளம் தாலுகாவில் நிலைமைக் கட்டுக்கடங்கியிருப்பதாக சர்க்கார் அறிக்கையொன்று கூறுகிறது.

மாஞ்செஸ்டர்:

சென்ற இரண்டரை ஆண்டுகளில், பிரிட்டனில், அதிகமான துணி உற்பத்தி மே மாதத்தில் தான் அதிகம் என்று பிரிட்டிஷ் காட்டன் போர்டு அறிவித்தது.

நிர்வாகத்தில்தான் ஊழல் மலிந்து கிடக்கிறது!

வீண் வழக்கிடத் தூண்டும் வழக்கறிஞர் கும்பல்!

பொய் கூறுவதற்கென்றே நீதிமன்றம் நுழையும் குடிகள்!

சிக்கல் மலிந்த சட்டங்களை அடுக்கடுக்காகக் குவிக்கும் ஆட்சி மன்றங்கள்!

உள் நாட்டு மந்திரி கட்ஜுவின் பித்தத்திற்கு பிரதம நீதிபதியின் உயர் மருத்துவம்.

"வழக்கறிஞர்கள் பணம் சம்பாதிப்பதையே பெரிதெனக் கொண்டுவிட்டனர். தொழிலின் கௌரவத்தையும், நோக்கத்தையும் அறவே மறந்து விட்டனர்."

"மாஜிஸ்திரேட்டுகள் வழக்குகளை விசாரித்து முடிவு காணுவதில் அக்கறை காட்டுவதில்லை; பலர், நீதிமன்றங்களுக்குக் குறித்த காலத்தில் வருவதில்லை. நீதி வழங்கும் எண்ணம் கொண்டவர்களாயிராது, நிர்வாக எண்ணம் கொண்டவர்களாகவே பலர் இருக்கின்றனர்."

"கோர்ட் கட்டணங்கள், சில சந்தர்ப்பங்களில், சிவில் வழக்குகளில் ஈடுபடுத்தப்படும் சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கு கட்டணமாக நீதியின் பெயரால் வசூலிக்கப்படுவது அநியாயமானது. சாதாரண மக்களால் அவ்வளவு பெரியதொரு கட்டணத்தைச் செலுத்தி நீதி பெற இயலாது."

—இவ்வாறு, இந்தியப் பிரதம நீதிபதி மேஹர் சந்த் மகாஜன், மத்திய மந்திரி கட்ஜுவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டு, 'நீதி அமைப்பில் தவறெதுவும் இல்லை; நீதியை அமுல் செய்யும் நிர்வாகத் துறையில்தான் தவறு இருக்கிறது,' என்றும் கூறியுள்ளார்.

வழக்காடக் கோரி வருபவர்களுக்கு நாணயமான அறிவுரை கூறாது, வழக்கிடும் போக்கை வளர்த்துவரும் வழக்கறிஞர்கள், பொய்யுரைப்பதைப் பற்றிக் கவலை கொள்ளாத சாட்சி கூற வரும் கனவான்கள், திறமையற்ற—சோம்பல் மிக்க மாஜிஸ்திரேட்டுகள், சிக்கல்கள் பல நிறைந்த சட்டங்களை நிறைவேற்றும் சட்டசபைகள், குற்றங்களைக் கண்டுபிடிக்க மட்டரகமான வழிகளைக் கையாளும் போலீஸ் துறையினர் இவர்கள் எல்லாம் பிரதம நீதிபதியின் கடுமையான கண்டனத்திற்கு ஆளாகியுள்ளனர்.

நீதி நிர்வாக சீர்திருத்த திட்டங்களைக் கொண்ட சுற்றறிக்கை பற்றி தனது கருத்தை இந்திய பிரதம நீதிபதி அறிவித்திருக்கிறார்:—

"நீதி அமுல் செய்யப்படுவதில் பொதுவாக எழுகிற அதிருப்தி எல்லாம், வெள்ளையர் ஏற்படுத்திய நீதி அமைப்பில் உள்ள குறையினால் அல்ல; மாறாக, அந்த நீதி அமைப்பு அமுலாக்கும் குறைபாடு மிகுந்த நிர்வாகத்தினால்தான்."

"நீதி அமைப்பை அமுலாக்கும் நிர்வாக இயந்திரம் சீர்படுத்தப்படாது அப்படியே இருக்குமானால், நீதி முறையில் செய்யப்படும் எந்த மாற்றமும் நிலைமைகளை முன்னேற்றாது.

"உயரிய தொழிலான வழக்குரைக்கும் தொழில் நீதி அமுல் செய்யப்படுவதற்கு உறுதுணையாக இருப்பதின் பொருட்டு ஏற்பட்டது.

"ஆனால், அத்தொழில் இன்று, திறமையற்றதாகவும், ஒழுக்கக்கேடானதாகவும் போய்விட்டதுமட்டுமின்றி, 'பணநாதன்' சிலைமுன் பணம் வேண்டி தவம் செய்யும் பக்தர்களாக வழக்கறிஞர்கள் மாறிவிட்டனர் என்பதும் வெட்கப்படத்தக்கது. எப்படியோ பணம் சம்பாதித்தாக வேண்டும் என்ற எண்ணம் தான் நிலவுகிறது.

"யோக்கியமாக நடந்து கொள்ளும் விதி விலக்கு பெற்றவர்களும் இத்தொழிலில் இருக்கத்தான் செய்கின்றனர்; ஆனால், அவர்கள் எல்லாம், கடல் நீரில் ஒரு துளி போன்ற அளவுதான் உள்ளனர். வழக்காடத் தகுதியற்றது என எத்தனை வழக்கறிஞர்கள் தங்களிடம் வழக்காட உதவி கோரி வருபவர்களுக்கு உண்மையாக அறிவுரை அவர்கள், ஒரு நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடாது என்றும், நேர்மாறான முடிவு கிடைத்த பின்னரும், அப்பீல் வழக்குத் தொடருவது சரியானதல்ல என்றும் சொல்லி அனுப்புகிறார்கள்?

"இந்த விஷயத்தில் எல்லா வழக்கறிஞர்களும், யோக்கியமாக நடந்துகொண்டால், இப்போது நமது நீதிமன்றங்களுக்கு வரும் வழக்குகளில் 50 சதவிகிதத்திற்கும் அதிகம் குறையும். நம் கண்களுக்கு மிகப் பெரியதாய்த் தெரியும் இந்தப் பிரச்னையும் நம் கவனத்தை ஈர்க்காது."

இந்தத் துறையில், பொது மக்களின் பொறுப்பு பற்றிக் கூறுகையில் நீதிபதி மகாஜன் குறிப்பிடுவதாவது:—

"வழக்காடுவதைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கு அடுத்ததாக, யாருடைய நன்மைக்காக இந்த நீதி அமைப்பு நிர்வகிக்கப்படுகிறதோ அவர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 6—7—54 செவ்வாய்

நிரந்தர மந்திரியின் தாராளம்!

இந்தியத் துணைக் கண்டத்தை விட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வெளியேறினதும், மற்ற மாநிலங்களைப் போலவே, சென்னை மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்து வந்திருக்கிறது. எவரை முதல் அமைச்சராகக் கொண்டு காங்கிரஸ் அமைச்சர் குழு அமைந்தபோதிலும், மீஞ்சூர் நிலக்கிழாரான பக்தவத்சலனார் மட்டும் ஏதாவது ஒரு அமைச்சராக இடம் பெறாமல் இருந்ததில்லை. மானத்தை விலை கூறியாவது, மந்திரி பதவியைப் பெறுவதில், காலஞ்சென்ற பூந்தமல்லி பேட்டை முதலியார் ரங்கனார் மருகர் மீஞ்சூர் மிராசுதார் நிரம்ப மிடுக்கானவர்! அவ்வாறு பதவி பெறும் வித்தையில், அவருக்கு அவரேதான் இணை!

தன்னை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த வாக்காளர் நலனை, அலட்சியப்படுத்திக் காலில் போட்டு மிதிப்பதிலும், மீஞ்சூரார் முதல் பரிசு பெறக்கூடியவர் — ஏற்கனவே பெற்றும் இருப்பவர். மந்திரி பதவி எனும் திருக்கோயிலில், சுயநலம் எனும் தெய்வத் திருவுருவத்தை வைத்துப் பூஜித்து வரும், அரசியல் கனவான்களுக்கெல்லாம், மீஞ்சூரார் ஒரு முன்னோடி—வழிகாட்டி—ஞானாசிரியர்—பெருங்குரு!

அவர், தம் பதவி காலத்தில் குல மக்கள் முன்னேற்றத்திற்கென, தம் சுட்டுவிரலையும் அசைத்தது கிடையாது! இன மக்கள் நல்வாழ்விற்கும் வழி வகை காண வேண்டுமே எனக் கனவிலும் கருதாத கனவான்—கனம், அந்த மீஞ்சூர் மாநுபாவர்!

தமிழ்—திராவிட மக்களின் நலனை காத்து வளப்பதில் அவருக்கு அக்கறை இல்லையானாலும், அதை மன்னித்து விடலாம், தமிழன் மதிப்பிற்கு மாசு வராமல் இருக்கட்டும் என்றாவது! ஆனால், அவர் சேவை, நலம் செய்வதில் இல்லையானாலும், அதற்கு நேர்மாறாக தமிழர் நலன்களுக்குக் கேடு சூழ்வதில், தீவிர மானக் கருத்துச் செலுத்துவதாக அமைந்திருக்கிறது. இந்த இனத் துரோகத்தைக் கண்ட எவருக்குத்தான் இதயம் துடிக்காது? குருதி சூடேறாதா? சீற்றம் பொங்காது? கண்கள் கனலை கக்காது?

இப்படியும் ஒரு தமிழர்—திராவிடர், பிறர் நகைக்க, பெரு உடல் தாங்கி பதவியில் அட்டைபோல் ஒட்டிக்கொண்டிருக்கிறாரே என்று கேட்க எந்த நியாய புத்தி படைத்தவரின் பார்வைதான், வினாக்குறியாக மாறாமல் இருக்கும்?

தமிழ் நாடு—திராவிடம்—ஏகாதிபத்தியப் பிடியில் தொழில் வளம் குன்றி, நாட்டுக்குடையவர்களே, திரைகடல் தாண்டிச் சென்றது பொன்னையும் மணியையும் பிறந்த நாட்டில் கொண்டு வந்து குவிப்பதற்கு அல்ல அவர்கள் அக்கரை சீமைக்குச் சென்றது. சமயவாதிகள் சாற்றுவது போன்று, பிறவிக் கடல் நீந்தி, பிறவாப் பெரியவனின் திருவடி நிழலில் நிரந்தரமாகத் தங்கி இருப்பதற்கு மல்ல! பின் எதற்காகக் கடல் கடந்து சென்றனர்? கொல்லும் வறுமையிலிருந்து தங்கள் தங்கள் உடலையும் உயிரையும் காப்பாற்றிக் கொள்ள பட்டினிச் சாவை மேலும் சில காலம் வரை தங்களைத் தீண்டவிடாமல் தொலைவிலேயே நிறுத்திவைக்க, கடல் கடந்தனர்—புது ஊர்களை நண்ணினர்—உள்ளூரிலே ஆகாது, உதவாது என ஒதுக்கித் தள்ளிய தொழில்கள் அனைத்தையும், மனமுவந்து செய்து வாழ்ந்தனர்—வாழ்ந்தும் வருகின்றனர்!

அங்கு சென்றவர் கண்களிலே நீர் முத்துக்கள்! அவர்கள் இருதயங்களிலே சோகம்! உடல்களிலே சோர்வு! அவர்கள்தம் நாவிலே, தங்களையும் அறியாமல், அவர்களை வாழ வகையற்றவர்களாக்கி வெளியே விரட்டியடித்ததற்காக, நமக்கு நிந்தனை!

இந்த அவல நிலை, வாழ்வு தேடி வெளிநாடுகளுக்குச் சென்றவர்களுக்கும், இங்கு, வேலையின்மைக்கு பலியாகிக் கிடப்பவர்களுக்கும், பொதுவாக உள்ளது!

இதைப் போக்க தொழில் நிலையங்கள் பல காணும், அதுவும், உடனடியாகக் காணும் அமைச்சர் குழு எதுவோ, அதுதான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கத் தகுதி கொண்டது. மக்களின் நல்வாழ்வைக் காத்து நிற்கும் ஆட்சி என்ற பெயரும், அப்பொழுதுதான், அதற்குப் பொருந்தவும் பொருந்தும்!

நாட்டு மக்களில் இலட்சக்கணக்கானவர் தொழில் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கும்பொழுது, அம்மக்கள் ஓட்டுப் பெற்று, ஆட்சியில் வீற்றிருப்போர், அவர்தம் குறைகளைப் போக்குவதற்கு பதிலாக, எங்கோ ஒரு கோடியில் உள்ள மக்கள் தொழிலின்றி தவிக்கின்றனர்—அவர்களுக்கு உதவ, "இதோ இயற்கை தந்துள்ள எங்கள் செல்வம், ஏற்றுக்கொள்ளுங்கள், இரக்கத்தோடு தருகிறோம், நீங்கள் இன்முகத்தோடு ஒப்புக்கொள்ளுங்கள்" எனக்கூற முன்வருவரேயாமாயின், அவர்களை என்னென்பது? பொறுப்பும் கடமையும் புரிந்தவர் என, புத்தியில் குறைந்தவனும் கூறான்! 'காணீர்! அமைச்சர்களின் இரக்கச் சிந்தையை!' என இனம் பற்றற்ற இழிமகனும் புகழான்!

திருநெல்வேலிக் கருகில் சங்குகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. அந்தச் சங்குகளைக் கொண்டு, பெண்கள் விரும்பி கரங்களில் அணியும் வளையல்களை, செய்து வருகிறது மேற்கு வங்கம்!

செய்த வளையல்களை, திரும்பவும் நமது திராவிடத்திற்கு அனுப்பி, ஒன்றுக்கும் பத்தாக விலை வைத்து விற்று பொன்னை லாபம் கொள்ளுகிறது மேற்கு வங்கம்!

இங்குள்ள வியாபாரிகள் அந்தச் சங்குகளை, மேற்கு வங்கத்தில் உள்ள வியாபாரிகளுக்கு விற்க. அங்குள்ள வியாபாரிகளிடமிருந்து கூடுதலான விலை கொடுத்து வங்க சர்க்கார் வாங்குகிறது!

கிழக்கு வங்காளத்திலிருந்து, மேற்கு வங்கம் வந்துள்ள 'அகதிகள்,' வங்க சர்க்கார் கொடுக்கும் சங்குகளைக் கொண்டு வளையல்கள் செய்து பிழைப்புத் தேடிக் கொள்கின்றனர்!

அதிக விலை கொடுத்து அச்சங்குகளை வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்வதற்கும் பதிலாகக் குறைந்த விலைக்குச் சென்னை சர்க்காரிடமிருந்து கொள்முதல் செய்ய, வங்க சர்க்கார் சென்னை சர்க்காரைக் கேட்டிருக்கிறது சென்னை சர்க்காரும் வங்க சர்க்காரின் கோரிக்கைக்கு ஒப்பி இருக்கிறது—இல்லை—ஒப்புதல் தர ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது!

அமைச்சர் பக்தவத்சலனார் இந்த உண்மையை அறிவித்துள்ளார்—சட்டசபையில் அல்ல—அந்த வழக்கத்திற்கும் காங்கிரஸ் அமைச்சர்களுக்கும்தான் நெடுநாள் பகையாயிற்றே — தென்காசி கூட்டமொன்றில்!

சங்கு — திருநெல்வேலிக் கருகில் பிறக்கிறது—ஏராளமாகக் கிடைக்கிறது!

அவைகளைக் குறைந்த விலை கொடுத்து, மொத்தமாக வாங்க வங்கசர்க்கார், சென்னை சர்க்காருடன் பேரம் பேசிக் கொண்டு இருக்கிறது!

இந்தச் சங்குகளை வேலையின்றி கிடக்கும் அகதிகளைக் கொண்டு வளையல்களாக மாற்றி, அவர்களுக்கு வாழ்வளிக்க முனைகிறது வங்க சர்க்கார்!

அகதிகள் உருவாக்கும் வளையல்கள், திரும்பவும் சென்னைக்கு அனுப்பப்பட்டு, நமது பெண்களின் கரங்களை அழகு செய்யப்போகிறது!

நமது மக்கள், அந்த வளையல்களுக்காகப் பெருந்தொகையைச் செலவிடப்போகின்றவர்—இப்பொழுதும் அத்துறையில் ஏராளமாகச் செலவிட்டும் வருகின்றனர்!

அமைச்சர் பக்தவத்சலனார் இந்த உண்மையை அறிவிக்கிறார்—வேதனையும் இல்லை வெட்கமுமில்லை, இதை அறிவிக்கும் அந்த அமைச்சருக்கு!

இங்கே, நமது மக்கள் தொழில் இல்லாமல், வாழவகை தெரியாமல் பஞ்சத்தாலும் பட்டினியாலும் மடிகிறார்களே, அதை நாம் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் அமைச்சராக இருக்கிறோமே, என்பதில் அவருக்கு வேதனை ஏற்படவில்லை — ஏற்பட்டதாகவுந் தெரியவில்லை!

இங்கு நம்மவர் தொழில் இன்றி தவிக்கும்போது, இங்கு கிடைக்கும் சங்கைக் கொண்டு, வளையல் தொழிற்சாலைகளை நிறுவி, நம்மவருக்கு வேலை தருவதற்குப் பதில், எங்கோ உள்ள அகதிகள் வேலையின்றி தவிக்கிறார்கள், அவர்கள் வறுமையைத் துடைக்க நம்முடைய செல்வத்தை—சங்கை குறைந்த விலையில் ஏற்றுமதி செய்ய முன்வருகிறோமே, என்பதில் வெட்கம் ஏற்பட்டிருக்க வேண்டும் அமைச்சருக்கு—ஏற்படவில்லை அமைச்சர் பக்தவத்சலனாருக்கு! அது ஏன்?—ஏனோ!

திருநெல்வேலி சங்கு குறைந்த விலையில் வங்கத்திற்குக் குடியேறி, அதை அங்குள்ள அகதிகள் வளையலாக மாற்றி, அதைத் திரும்பவும் சென்னைக்கு அனுப்பி அதிக விலைக்கு விற்று, அவர்கள் சுக வாழ்வு தேடுகிறார்களே என்பதில், அமைச்சருக்கு மட்டுமல்ல, சாதாரண தமிழனுக்கும் மானம் பிறந்திருக்க வேண்டும்!

பொறுப்புள்ள அமைச்சருக்கே பிறக்காமல் இருக்கிறபொழுது, அவரை அமைச்சராக ஏற்றுக்கொண்டிருக்கிற மக்களுக்கு மட்டும் எப்படி மானம் பிறக்கும் என்று எண்ணுகிறார் போலும் அமைச்சர்!

சேர்க்கை வாசனையால், பதவி மோகத்தால் அமைச்சரிடம் அந்தப் பண்பு குறைந்து காணப்பட்டாலும் தமிழ் மக்களிடம் அது குறைந்துவிடவுமில்லை — கெட்டுப் போகவுமில்லை. இந்த உண்மையை அமைச்சர் பக்தவத்சலனார் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சங்குகளை, வங்க சர்க்கார் கோரிக்கைப்படி, வங்கத்திற்கு அனுப்புவதற்குப் பதில், வளையல் தொழிற்சாலைகளை, தமிழகத்திலேயே ஏற்படுத்தி, இங்குள்ள அகதிகளுக்கு—இல்லை—ஆதரவற்ற 'அனாதை'களுக்கு பிழைக்க வழி செய்ய வேண்டும்! தவறு செய்தால், அதன் பலனை அனுபவிக்க அமைச்சர் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்!

தாய் பிண்ணிப் பிச்சை எடுக்கும் பொழுது கும்பகோணத்தில் கோதானம் செய்யும் தனயனை, சிறு மதி படைத்தவனும் பெரியவன் எனப் பேசான்!

அமைச்சர் தாராள புத்தியை விட்டுவிட்டு, சொந்த மக்களின் வேலையில்லாமையைக் களைய முன்வருவாராக!

வேலை தேடித் தர ஏற்பாடு

மாணவர்களுக்கு கல்லூரியே உதவும்

ஹைதராபாத்திலுள்ள வர்த்தகக் கல்லூரி ஒன்று தனது மாணவர்களுக்கு வேலை தேடிக்கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

அக்கல்லூரியின் தலைவர் இது பற்றிப் பேசும்போது, "இக்கல்லூரியிலிருந்து பட்டம் பெறும் மாணவர்கள் அனைவரும் 25 வயது வரையில் இக்கல்லூரியின் மூலமே வேலை தேடிக் கொள்ளலாம்," என்று குறிப்பிட்டார்.

"இதற்காக ஒவ்வொரு மாணவரும் 'வேலை நிதி' என்னும் நிதிக்கு ஒரு ரூபாய் கட்ட வேண்டும். இப்பணம் வேலை தேடுவதற்காகச் செலவிடப்படும்," என்று அவர் மேலும் கூறினார்.

சில சந்தர்ப்பங்களில் இத்திட்டத்தின் மூலம் சில மாணவர்களுக்கு தொழில் ஆரம்பிக்கவும் உதவி செய்யப்படுமாம்!

எண்ணெய் கிடங்குகளில் போலீசார் சோதனை

3 பேர் கைது

சென்ற வெள்ளியன்று, போலீசார் கல்கத்தா வடபகுதியிலுள்ள மூன்று எண்ணெய்க் கிடங்குகளைச் சோதனையிட்டனர். போலீசாருடன் கல்கத்தா கார்ப்பரேஷன் சிப்பந்திகளும் ஒத்துழைத்தனர். கலப்படம் செய்யப்பட்டது என சந்தேகித்துப் போலீசார் 160 டின் தாவர எண்ணெயைக் கைப்பற்றினர். இது சம்பந்தமாக மூன்று பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

ஜெர்மன் குரூரவெறிப் படை: அறுவருக்கு தண்டனை

இராணுவ நீதி மன்றம் தீர்ப்பு

ஜெர்மன் குரூரவெறிப் படைவீரரான 6 பேருக்கு இராணுவ நீதி மன்றம் ஒன்று மரண தண்டனை விதித்தது.

இவர்கள் ஆறு பேர் மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. ஸ்ட்ராஸ்பர்க் என்னுமிடத்தில் கைதிகள் முகாமில் இந்த எஸ். எஸ். படையினர் இருட்டறைகளிலும், வாயுக்கள் மத்தியிலும், மயானத்திலும், எப்படி ஆண்—பெண் அனைவரையும் பாகுபாடின்றி பயங்கர முறையில் கொலை செய்தனர் என்பதுபற்றி மூன்றுவார காலம் விசாரணை நடைபெற்றது.

கலியாண வீட்டில் கம்யூனிஸ்டுகள் கூடிப் பேசுகின்றனர்!

போலீசாரை ஏமாற்ற கையாளும் முறை!

ஈரானில் திருமண வீடுகளில் போலீசார் கண்காணிப்பு

டெஹ்ரான், ஜூலை 5—

ஈரான் பாதுகாப்புப் படையினர் நாட்டில் நடைபெறும் திருமணங்கள் அனைத்தின் மீதும் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றனர்.

சென்ற வாரம் நடைபெற்ற திருமணம் ஒன்றில் தடை செய்யப்பட்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டம் நடைபெற்றதைப் போலீசார் கண்டுபிடித்தனர்.

இதை ஒட்டி நாடு முழுமையும், மண விழாவின்போது, போலீசார் தங்கள் கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றனர்.

1943-ல் அங்கே கம்யூனிஸ்டு கட்சி தடை செய்யப்பட்டது. அதிகாரிகளை ஏமாற்ற திருமண வீடு ஒன்றுதான் கம்யூனிஸ்டுகளுக்குக் கூட்டம்போட தகுந்த இடமாக இருக்கிறதாம்!

சென்ற திங்களன்று போலீசார் திருமண வீடொன்றில் நுழைந்து மணமக்கள் உட்பட 379 பேரை விசாரணை செய்தார்களாம். இவர்களில் 32 பேரைத் தவிர மற்றவர்களைப் பின்னர் போலீசார் விடுதலை செய்துவிட்டனர். இந்த 32 பேர் மீது விசாரணை நடைபெறுமென்று தெரிகிறது.

ஈரான் சட்ட சபையான மஜ்லிஸில் பாதுகாப்பு அமைச்சரான ஜெனரல் அப்துல்லா, கம்யூனிஸ்டுகளின் போக்கைத்தான் சரியாகத் தெரிந்தவர் என்றும், அதற்கு மாற்று வழிகளும் தனக்குத் தெரியுமென்றும் கூறினார்.

மூன்று பேருக்கு மேல் கூடக் கூடாது என்ற இராணுவ உத்தரவில் திருமணங்களுக்கு விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

இதனைப் பற்றி கம்யூனிஸ்டுகள் பயன்படுத்துகின்றனர் என்று தெரிகிறது.

ஏழாண்டு 'சுதந்திர' ஆட்சியில் என்ன கண்டோம்?

—(:)—

வடநாடு வளமாகவும் தென்னாடு தேயவும்தானே திட்டங்கள் தீட்டப்பட்டன?

வேலூர் அரசியல் மாநாட்டில் மதியழகன் தலைமையுரை

"இந்தியா சுதந்திரம் பெற்ற ஏழாண்டுக் காலத்தில் நாம் என்ன கண்டோம்? தென்னாடு என்ன பலன் கண்டது? முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்—இப்படி எல்லாம் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்ய திட்டமிடுகிறார்களே—தென்னாடு அத்திட்டங்களினால் பலன் என்ன கண்டது? வடநாடு வளமாகவும், தென்னாடு தேய்ந்துபோகவும் தானே அந்தத் திட்டங்கள் எல்லாம் பயன்பட்டன?"

என்று, 27—6—54-ல், வேலூரில் நடைபெற்ற வடார்க்காடு மாவட்ட தி மு கழக 2-வது அரசியல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், தனது தலைமையுரையில் கேட்டுவிட்டு, தொடர்ந்து கூறியதாவது:—

"இன்று திராவிடத்தின் நிலை என்ன? இந்த நாட்டிலே பிறந்தவர்கள் வாழ வழியின்றி வேறு பல நாடுகளுக்கு கூலி வேலை செய்யச் செல்கின்றனர்; அப்படிச் சென்றவர்களிலே 10 லட்சம் பேர் இன்று சிங்களத்திலே இருக்கிறார்கள்; அவர்கள் எல்லாம் இனி அங்கே வாழ முடியாது, துரத்தியடிக்கப்படுகிறார்கள்—அந்த நாட்டு அரசாங்கத்தால்! இங்குள்ள அரசாங்கமோ அவர்களை ஏற்றுக்கொள்ளவும் மறுக்கிறது! அவர்கள் அங்கே வாழ்வதற்கு வழி செய்து தரவும் வகையற்று கையாலாகாமல் இருக்கிறது!!

"வடநாட்டில் அகதிகள் பிரச்னை வந்த நேரத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி அழுத வடநாட்டு அரசாங்கம், இன்று 10 லட்சம் இந்தியர்கள் இலங்கையிலிருந்து துரத்தப்பட்டு அவதியுறும்போது வாய் மூடி மௌனியாய் இருப்பானேன்? இந்தப் பாரபட்சம் காட்டப்படுவதற்கு இலங்கையில் வதிபவர்கள் எல்லாம் தென்னாட்டவர்—திராவிடர்—தமிழர் என்ற காரணத்தைத் தவிர வேறென்ன? இந்த நிலைகள் எல்லாம் நமது இலட்சியமான திராவிட நாடு திராவிடருக்கே என்பதை உறுதிப்படுத்தவில்லையா?"

இன்று, இந்தியாவெங்கும் மொழிவழி மாநிலக் கோரிக்கை வலுத்து நிற்பதையும், அதற்காக ஆங்காங்கே உள்ள மக்கள் போராட்டங்களில் ஈடுபடுவதையும் காண்கிறோம். நாமும், நம்முடைய இலட்சிய கீதமான 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் கொள்கைக்கு மொழிவழி மாநில அமைப்பே அடிப்படை எனக் கருதுவதால், மொழி வழி மாநில புனரமைப்புக் குழுவினரிடம் நமது எண்ணத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்."

"நமது இலட்சியத்தை அடைவதற்காக எத்தகு எதிர்ப்புகள் வரினும் அது பற்றி நமக்குக் கவலை இல்லை. யார் யாரோ, எப்படி எல்லாமோ எதிர்த்துப் பார்த்து ஓய்ந்துவிட்ட நேரத்தில், கனம் ராமசாமியார் நம்மை ஒழித்துவிடப்போவதாகச் சொல்கிறார் தோழர் ராமசாமிப் படையாச்சி, ஆச்சாரியாரைக் காட்டிலும் எந்த வகையிலும் எள்ளளவும் உயர்ந்தவரல்லர்; அந்த ஆச்சாரியாரே நம்மை ஒழித்துவிடுவதாகக் கொக்கரித்தார்—இறுதியில் அவரது ஆணவமே அவருக்கு அழிவைத் தேடித்தந்தது! அதே போல அன்பர் ராமசாமி ஆணவத்தோடு பேசுகிறார். 70 வயது முதிர்ச்சியும், நிறைந்த அனுபவமும், காந்தியாரின் சம்பந்தி என்ற உறவும், நேரு, ராசேந்திரபிரசாத் ஆகியோரின் அன்பையும் உடைய ஆச்சாரியாராலேயே நம்மை ஒழிக்க முடியாது ஓடிவிட்டார் என்றால் சாதாரண கனம் ராமசாமியார் என்ன செய்ய முடியும் நம்மை?

வன்னியகுல மக்களுக்கு இவர் என்ன நன்மை செய்துவிட முடியும் மந்திரியாகிவிட்டதால்! அரிசனங்களுக்கு என்ன செய்ய முடிந்தது அரிசன மந்திரி ஒருவர் இருப்பதால்! இதை உணரவேண்டும் ராமசாமி படையாச்சியாரும், அவரது சகாக்களும்!!

"தி. மு. கழகம் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு துணை நின்று பாடுபடும். அவர்களுக்கு மட்டுமின்றி, காரை, புதுவையிலே பிரெஞ்சுப் பிடியில் தவிக்கும் மக்களின் விடுதலைக்கும் நாம் பாடுபடுவோம். இலங்கை வாழ் திராவிடரின் இன்னல் போக்கவும் நாம் தயாராயிருக்கிறோம். இவற்றிற்கெல்லாம், நாம், நமது தாயக விடுதலை மிக அவசியமென உணர்ந்து போராட்டங்களிலே ஈடுபட்டு வருகிறோம்."

"நம் நாட்டு மக்களை இனியாயினும் எவரும் அடிமை கொள்ள அனுமதியோம் என்ற சூளுரையுடன் நீங்கள் உறுதியுடன் அண்ணா அவர்களின் தலைமையிலே பணியாற்ற முன்வர வேண்டும். 8 கோடி திராவிடரின் விடுதலைக்கு துப்பாக்கி ஏந்தித்தான் ஆகவேண்டும் எனும் நிலை பிறந்தால் அதற்கும் நாம் தயார்தான் என்பதை நினைவில் கொண்டு விடுதலைப் படையில் அணிவகுத்து நிற்க வாரீர்!"

இன்று நடைபெறுகிற மாநாட்டிற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. இந்த நாட்டு மக்களின் எதிர்கால வாழ்வைக் குட்டிச்சுவராக்குவதற்காக ஆச்சாரியாரால் கொண்டு வரப்பட்ட கல்வித் திட்டத்தை எதிர்த்து போராடி வெற்றி பெற்றிருக்கிற பெருமையோடு இங்கு நாம் கூடியிருக்கிறோம்.

ஆச்சாரியாரின் வர்ணாசிரமக் கல்வித் திட்டத்தை கம்யூனிஸ்டுகள் எதிர்த்தார்கள்; உழைப்பாளர் கட்சி எதிர்த்தது; நாம் எதிர்த்தோம், இன்னபிறரும் எதிர்த்தனர்; என்றாலும், நம்மால் மட்டும்தான் திட்டத்தை எதிர்த்து போராட்டத்திலே ஈடுபட முடிந்தது.

கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம் நடைபெறும் போதே நாம் வேறு இரண்டு போராட்டங்களிலும் ஈடுபட்டோம்—கல்லக்குடி அறப்போர்; ரயில் நிறுத்தப் போராட்டம்—இப்படி நாம் மூன்று முனைகளிலே போர் தொடுத்தோம்; 5000 பேர் சிறைப்பட்டோம்; 6 பேர் உயிரிழந்தனர்: கல்லக்குடி, அரியலூர் போன்ற இடங்களிலே போரில் ஈடுபட்ட தோழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்—போதாதென்று சதி வழக்குகள் வேறு!

இன்று கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டு விட்டது. அதைப் போலவே ஆட்சியில் இருப்பவர்கள், அந்தத் திட்டத்தை எதிர்த்துப் போரிட்ட தோழர்கள் மீது தொடுத்திருக்கும் சதி வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும்.

நாம் இங்கே மாநாடு நடத்துகிறோம்—கடந்த காலத்தில் நடத்திய போராட்டங்களில் நாம் பெற்ற வெற்றி, இந்நாட்டு வரலாற்றிலே இடம் பெற்றுள்ளது பெருமையோடு பூரிப்போடு!

அடிக்கடி இம்மாதிரி மாநாடுகள் நாட்டிலே நடந்தவண்ணம் உள்ளன; நாம் இந்த நாட்டிலே எழுப்பிய விடுதலை கீதம்—புரட்சிப் புயலாக, சிந்தனைத் தீயாக உருவெடுத்து, நாடு நகரமெங்கும் பரவியுள்ளது.

நீங்கள் சமீபத்தில் அண்ணா அவர்கள் எழுதிய 'சொர்க்க வாசல்' படத்தைப் பார்த்திருப்பீர்கள்—அதிலே வரும் மதிவாணன் என்ற கவிஞனின் பாடலை நாட்டவர் பாடக்கூடாதென அரசன் தடை விதிக்கிறான்; ஆனால் அந்தத் தடை உடைபடுகிறது—மக்கள் தொடர்ந்து அந்தப் பாடலையே பாடுவதின் மூலம்! இது கதை!!

ஆனால், இந்த மாவட்டத்திலே இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் அப்படி ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அண்ணா அவர்கள் எழுதிய 'ஆரியமாயை' என்ற நூலுக்கு தடை விதித்து, அண்ணா அவர்களை அரசாங்கம் ஆறு மாதம் சிறையில் தள்ளியபோது இந்த மாவட்டத்தின் நகரங்கள், பட்டி தொட்டிகளில் எல்லாம் அரசாங்கத்தின் தடையை மீறி, தோழர்கள் 'ஆரிய மாயை' புத்தகத்தை வீதி வீதியாகப் படித்துக் காட்டினர்; சிறைப்பட்டனர்; அரசாங்கத்தின் தடை உடைபட்டது; தோழர்கள் வெற்றி கண்டனர்! இது வரலாறு!!

ஏன் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நம்மை அழித்துவிட நினைத்த ஆளவந்தார்கள் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறை என்ன கொஞ்சமா? என்றாலும் நாம் மிகப் பெரிய அளவில் வளர்ந்து வந்துள்ளோம்—அழிந்துவிடவில்லை நாம்—அழிக்கப்பட முடியவில்லை!

இன்றைய நமது இதயகீதம்—லட்சிய மூச்சான 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற உரிமை முழக்கத்திற்கு மூல காரணமே, இதே வேலூரில், 1938ல் நடைபெற்ற தமிழர் மாநாட்டின் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற கூரல் தான்!

வேலூரில்தான் 200 ஆண்டுகட்கு முன்னால் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கால்கோல் விழாவை ராபர்ட் கிளைவ் நடத்தினான். இந்த நாட்டிலே நிலவிய சிறு சிறு தெலிச் சண்டைகள் வெள்ளை ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் வேரூன்றி விடுவதற்கு எவ்வளவு துணையாயிருந்தன என்பதற்கு முகமதலியும், சந்தா சாகிபும் ஆற்காடு நவாபு ஆவதற்காக இட்ட சண்டைகளே போதுமானதாகும்

அந்த ராபர்ட் கிளைவ் இந்த நாட்டு மக்கள் எல்லாம் வாழத் தெரியாதவர்கள் என்று சொல்லிவிட்டுப் போனான். இந்த நாட்டில்—அடிமையாக்கப்பட்ட நாட்டில் 'அரசர்கள்' இருந்தார்கள்; அவர்களுக்கு அடிமைகள் பலர் இருந்தார்கள்.

அப்படி அடிமையான இந்தியத் துணைக்கண்டத்திற்குத்தான் சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று சொன்னார்கள்—வெள்ளையனை வெளியேற்றிவிட்டோம் என்றார்கள்—காங்கிரஸ் நண்பர்கள்!

தென்னாட்டவர் கல்விக்காக......

பம்பாய் முனிசிபாலிடி சாதனை

பம்பாய், சயான் பகுதியில் 16—6—54ல், பம்பாய் முனிசிபாலிடியாரால் ஒரு தமிழ்ப் பாடசாலை புதிதாகத் திறக்கப்பட்டது. இதில் 1 முதல் 4 வகுப்புகளுடன் ஆரம்பத்திலேயே 40 பிள்ளைகள் பயின்று வருகிறார்கள். இது தென்னிந்திய குழந்தைகளுக்காக, பம்பாய் முனிசிபாலிட்டியால் நடத்தப்பட்டு வரும் பாடசாலைகளில் 31வது ஆகும். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளில் பம்பாயின் பல பாகங்களிலும் பாடசாலைகள் நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுள் மாதுங்கா, தாதர், லைகாம், சீராவசார், தாராவி, பாண்டுப், மான்கூர்ட், சயன் ஆகிய இடங்களில் 8 தமிழ்ப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. இவைகளில் மிகப் பெரியதான மாதுங்கா பாடசாலை 500 மாணவர்களைக் கொண்டு 7 வகுப்புகள் நடைபெறுகிறது. 1953—54ல், 'எப்' வார்டிலுள்ள முனிசிபல் பாடசாலைகளிலெல்லாம் முதன்மையானதெனக் கருதப்பட்டு கேடயம் (ஷீல்டு) பெற்றது குறிப்பிடத் தக்கது. இம்முறையில் ஒரு தமிழ்ப்பாடசாலை விளங்குவது தமிழர்களுக்கே மிகப் பெருமை தருவதாகும் இதற்காக பம்பாய் முனிசிபாலிடியை பாராட்ட கடமைப்பட்டுள்ளோம். (ஒரு நிருபர்)

முதலமைச்சரிடம் முறையீடு

"நகராண்மைக் கழக பொதுத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கச் சார்பில் தோழர்கள் ஆர். இராமநாதன், பே. தா. இன்மொழியன் ஆகியோர் சென்னை முதல் அமைச்சரையும், ஸ்தல ஸ்தாபன அமைச்சரையும் பேட்டி கண்டு நகராண்மை கழக அதிகாரிகளின் தவறான போக்கையும், தொழிலாளர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் எடுக்கும் நடவடிக்கைகளையும் சுட்டிக் காட்டிவிட்டு, அண்மையில் நீக்கப்பட்ட ஆறு தொழிலாளர்களையும் உடனே வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

இந்த முறையீட்டினை அமைச்சர்கள் அனுதாபத்துடன் கேட்டு ஆவன செய்வதாக வாக்களித்தனர்" என்று பே. தா. இன்மொழியன் தெரிவிக்கிறார்.

கடன்

தஞ்சை மாவட்டத்தில் தேசிய திட்டக் கடன் பத்திரங்கள் இதுவரை 19 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறதாம்.

அழகிரி பூப்பந்தாட்டக் கழகம்

கடலூர், ஓ டி. ஜூலை 3—

27—6—54 மாலை 4 மணிக்கு கடலூர் மஞ்சக்குப்பம் நகர் அரவிந்தர் சாயச்சாலை திடலில் அழகிரி பூப்பந்தாட்டக் கழகம் துவக்கப்பட்டு கீர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—தலைவர் ஆ சஞ்சீவி; செயலாளர்: ப. தெய்வமரறன்; செயற்குழு உறுப்பினர்கள்: சி. தண்டபாணி, ஆ. சதநார், சட்சிணாமூர்த்தி, மற்றும் சிலர்

திருக்குறள் சிறப்புக் கூட்டம்

27—6—54 மாலை 6 மணிக்கு பொன்மலை இரயில்வே படிப்பக மன்றத்தில் திருக்குறள் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, புலவர் ஆ. குருசாமி ஐயா அவர்கள், 'வள்ளுவர் நெறியும் வாழ்க்கை முறையும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

தேனீர் விருந்து

அய்யம்பேட்டை தி. மு. கழக பிரமுகரான தோழர் என். ஆறுமுகம் மலேயா செல்வதை முன்னிட்டு அவருக்குத் தோழர் ராமநாதன் தலைமையில் தேனீர் விருந்து நடைபெற்றது தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர்.

பெயர் சூட்டல்

20—6—54ல் (தஞ்சை) கீழ்வாசலில் தோழர் டி. நடராசன் குழந்தைகளுக்கு 'அறிவழகன்', 'தாமரைச் செல்வன்' எனப் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

பிறப்பு

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் மூதூர் எஸ். எம். சௌந்திர பாண்டியன் வாழ்க்கை துணைவியார், 24—6—54ல் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயரானார். குழந்தைக்கு 'ஆசைத்தம்பி' என்று பெயரிடப்பட்டது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

குலதர்மக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போர் மறியலில் ஈடுபட்டு ஒரு திங்கள் சிறை சென்றவரும் செல்வபுரம் தி. மு. கழக செயலாளருமான தோழர் வணங்காமுடியின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் இராசம்மாள் இம்மாதம் ஒரு ஆண் மகவைப் பெற்றெடுத்தார்—தாயும்—சேயும் நலம்.

அனுதாபம்

சென்னை, திருவல்லிக்கேணி கே. என். பாண்டியன் படிப்பக துணைச் செயலாளர் மா. வெ. திருமகன் தந்தையார் எம். வி. செல்லம் மறைவுக்கு, படிப்பகத்தார் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

* * *

தமிழ் புலமை மிக்காரும், தமிழ்ப் பிரியருமான சேலை ஆனந்தம் அவர்கள் தமது 73வது வயதில் சோலைமலை பெற்றியதை முன்னிட்டு அவர்தம் குடும்பத்தாருக்கு மூனார் தி. மு. கழகம் தமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

• • •

மேட்டூர் அணை தி. மு. கழகப் பொருளாளர் தோழர் எம். தயாளதாஸ் அவர்களின் தாயார் திருமதி அம்மாள் இயற்கை எய்தியமைக்கு மேட்டூர் அணை தி மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

நீதி அமைப்பில் குறை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்—இந்தக் குடியரசு நாட்டு மக்களில் வழக்காடுபவர்களாகவும், சாட்சி கூறுபவர்களாகவும் வருபவர்கள், நாணயம் அல்லது உண்மை பற்றிய அறநெறியைக் கடைபிடித்து ஒழுக நினைக்கிறார்களா?" என்கிறார்.

மாஜிஸ்திரேட்டுகளை தங்கள் செல்வாக்கால் வசப்படுத்துவதையும், நீதி மன்றங்களில் பொய்யுரைப்பதையும் வன்மையாகக் கண்டித்துவிட்டு, பிரதம நீதிபதி கூறுவதாவது:—

'நாட்டு மக்களின் நடத்தையும், ஒழுங்கும் சீராக கட்டி வளர்க்கப்பட்டாலன்றி — நீதியும் நேர்மையும் அவர்களுக்கு தகுந்த கல்வின் மூலம் போதிக்கப்பட்டாலன்றி, சிவில், கிரிமினல் சட்ட அமுல் முறைகளிலோ சாட்சிய விதி முறைகளிலோ செய்யப்படுகிற எந்த மாறுதலும் எந்தவிதப் பயனையும் தராது."

அவர் மேலும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

'துணை நீதி மன்றங்களின்தரம் வெகுவாகக் குறைந்துவிட்டது நீதிபதிகளில் பெரும்பாலானோர் குறித்த காலத்தில் மன்றத்திற்கு வருவதில்லை. அப்படியே வந்தாலும், தங்களின் ஓய்வுபெறும் அறைகளிலேயே வெகு நேரத்தைக் கழித்துவிடுகின்றனர். பிறகு அவர்கள் வேலை செய்ய ஆரம்பிக்கும்போது அவர்களின் எண்ணமெல்லாம் எங்கேயோ சென்று விடுகிறது."

"வழக்கு சம்மந்தப்பட்ட தஸ்தாவேஜிகளை அவர்கள் சரிவரப் படித்தறிவதில்லை திறந்த மனதுடன் சாட்சியங்களையோ, வாக்குமூலங்களையோ வழக்குகளின் முக்கிய அம்சங்களையோ ஊன்றிக் கவனிப்பதில்லை. வழக்கறிஞர்களே குறிப்பிட்ட வழக்கில் முடிவு செய்யப்படவேண்டிய விஷயங்களைத் தொகுத்துத் தருமாறு கேட்கப்படுகிறார்கள்.

"சில நேரங்களில், வழக்கின் சில அம்சங்களில் இருதரப்பு வழக்கறிஞர்களும் ஒத்துப் போகும்படி கோரப்படுகின்றனர். வழக்கறிஞர்களும், சுருக்கெழுத்தாளர்களுக்கு, முடிவு செய்யப்பட வேண்டியவற்றை ஒப்புவித்து விடுகின்றனர். வாக்குமூலங்கள் சுருக்கெழுத்தாளர்களாலேயே பதிவு செய்யப்படுகின்றன. நீதிபதியின்முன்னிலையிலேயே வாக்குமூலங்கள், சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களால் சுருக்கெழுத்தாளர்களிடம் ஒப்புவிக்கப்படுகின்றன. நீதிபதியோ, ஏதாவது கடிதம் எழுதுவதிலோ அல்லது வேறேதேனும் காரியம் செய்வதிலோ ஈடுபட்டுள்ளார். எந்த முறையாயிருந்தால்தான் என்ன? இப்படிப்பட்ட நீதிபதிகளைக் கொண்டு எப்படி இலாக்கா சரிவர இயங்க முடியும்? நல்ல திறமையான நீதிபதியைக் கொண்ட நீதி மன்றங்களில் இன்றும் வழக்குகள் விரைவாக முடிக்கப்படுகின்றன.

"புது டில்லியில் வாடகைக் கட்டுப்பாடு, வீட்டை விட்டு வெளியேற்றல் போன்ற வழக்குகள், ஆண்டுகள் பலவாக நீண்டுகொண்டே சென்றதின் காரணம், வழக்காடுபவர்களிலேயோ அல்லது வழக்காடுபவர்களின் வக்கீல்களாலேயோ கேட்டுக்கொள்ளப்படுவதற்கிணங்க, வாய்தாக்கள் ஏராளமாகத் தரப்பட்டதுதான். இது ஒரு உதாரணம் —வழக்கு மன்றங்களின் பெருமையும், திறமையும் குறைந்துவிட்டதென்பதற்கு!"

சட்டசபைகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் நீதிபதி மகாஜன் குறிப்பிடுவதாவது:—

"ஒரு நாட்டில் நிலவுகிற பயங்கரக் கேடுகளை ஒழிப்பதற்கே, சட்டங்கள் இயற்றுவது நியாயமானதாகும். ஒரு நல்ல ராஜ்ய அமைப்பு, சாதாரணமானவைகளுக்கெல்லாம் போலிக் காரணங்களைக் காட்டி சட்டமியற்றுவது கூடாது."

"மக்களின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எண்ணற்ற சட்டங்கள் இருக்கவேண்டுவது அவசியமல்ல. ஒரு சமுதாயம் நாகரிகம் பெற்ற சமுதாயம் எனக் கொள்ளப்படுவது, அந்தச் சமுதாய மக்கள் ஏராளமான சட்டங்களால் பயமுறுத்தப்படாமல் இருப்பதைப் பொறுத்துத்தான்.

"ஒரு குறிப்பிட்ட ஒழுக்கத் தரத்தை நாட்டு மக்களிடை நிலை நிறுத்துவது தேவையாகும் போதுதான்சட்டங்கள் இயற்ற வேண்டும்;

'சமுதாயத்திற்கு பல்வேறு ரூபங்களில் அறிவு புகட்டுவதினால் பெறக்கூடியவற்றை, சட்டங்கள் மூலம் சாதித்து விடலாம் எனக் கருதுகிறார்கள்; அப்படி இயற்றப்படுகிற சட்டங்கள் மதிக்கப்படுகின்றனவா, அல்லது அந்தச் சட்டங்களை அமுலாக்கப் போதுமான நிர்வாக இயந்திரம் இருக்கிறதா என்பதைப் பற்றிய கவலை அவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

"எனவே, நீதி முறை அமுலாக்கப்படுவதில் செய்யப்படும் எந்த சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளுமுன், சட்டப் பட்டியலை ஆராய்ந்து, கட்டாயமாக சமுதாயத்திற்குத் தேவை என்பனவற்றை மட்டும் வைத்துக்கொண்டு தேவையற்றவைகளைத் தூக்கி எறிந்து விடுவதுடன், சட்டப் பட்டியலை சுலபமாகப் புரிந்துகொள்ளத்தக்கதாக்க வேண்டும்!

"ஒவ்வொருவரும் சட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்; ஆனால் அது எத்தனை பேருக்குப் புரியும் என்பது ஒரு கேள்வி? சட்டங்கள் லகுவில் புரியக்கூடியதாக ஆக்கப்பட்டால் இப்போதுள்ள முறைகளே இன்னும் திறமையாக வேலை செய்ய முடியும்."

சட்டங்களைப் புரிந்துகொள்வதில் உள்ள கஷ்டத்தினால், வழக்குகள் தீர்க்கப்படுவது எவ்வளவு தாமதமாகிறது என்பதை நீதிபதி மகாஜன் விளக்கியுள்ளார்.

"இந்திய உயர்நீதி மன்றத்தில் உட்கார்ந்திருக்கிற நாங்கள், ஒரு சட்டத்தின் வாசக அமைப்பு பற்றிய விவாதங்களை நாட்கணக்கில் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த விவாதங்களை நாங்கள் எல்லோரும் ஒத்துக்கொள்வது அதிருஷ்டவசந்தான்; ஆனால் கருத்து வேறுபாடிருப்பது ஒன்றும் புதிதல்ல!

"அதே அந்த வட்டங்களில் உள்ள உயர்நீதி மன்றங்களே, இப்போதுள்ள சட்டங்களின், பொருளை நிலைநாட்டுவது கடினமாயிருக்கும்போது, கீழ்நீதி மன்றங்களை எப்படிக் குறை சொல்ல முடியும்.

'குற்ற வழக்குகளில் பெரும்பாலானவை, போலீசார், குற்றங்களைப் பற்றி, புலன் விசாரணை செய்ய ஏற்படும் காலதாமதத்தினாலேயே, தீர்க்கப்படுவதற்கு நாளாகிறது' என்ற மத்திய அரசாங்க பாதுகாப்பு மந்திரியின் கூற்றை ஒப்புக்கொண்டு நீதிபதி மகாஜன் கூறியதாவது:—

"குற்றங்களை ஆய்ந்தறிந்து கண்டுபிடிக்க, ஒரு தனி போலீஸ் 'ஏஜன்ஸி' இருக்க வேண்டும்; 'அந்த 'ஏஜன்ஸியே' சர்க்கார் தரப்பு வழக்குகளைத் தயாரிக்க வேண்டும்; குற்றங்களைக் கண்டுபிடிக்க ஒரு காலவரையறை ஏற்படுத்தப்பட வேண்டும்; அப்படி வரையறுக்கப்பட்ட காலத்திற்கும் அதிகமாகத் தேவைப்பட்டால் தகுந்த காரணங்கள் காட்டப்பட வேண்டும்.

"போலீஸ் இலாக்காவில் ஒரு இரட்டை முறை இருத்தல் வேண்டும். ஒரு பிரிவு, 'குற்றங்களைக் கண்டுபிடித்து வழக்குத் தொடர'வும், இன்னொரு பிரிவு, 'நாட்டின் அமைதியையும சட்டத்தையும் நிலைநாட்டுவதற்காக' வும் —என்று இரு பிரிவுகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு போலீஸ்காரருமோ அல்லது ஒவ்வொரு 'சப்—இன்ஸ்பெக்டரு'மோ, ஒரு குற்றத்தை கண்டுபிடிக்கத் தகுதி பெற்றவர்கள் எனக் கொள்ள முடியாது. போலீசாரில் பெரும்பாலனவர்களுக்கு மூன்றாந்தரமான வழிகள்தான் தெரியுமே அன்றி வேறெதுவும் குற்றங்களைக் கண்டுபிடிக்கத் தெரியாது.

கோர்ட் கட்டணங்கள் குறைக்கப்படுவதை வரவேற்று நீதிபதி மகாசன் குறிப்பிடுவதாவது:—

"சில சந்தர்ப்பங்களில் சிவில் வழக்குகளின் மொத்த மதிப்பில் மூன்றில் ஒரு பங்கு கோர்ட் கட்டணமாக ராஜ்ய சர்க்கார் வசூலிக்கின்றது; அவ்வளவு பெரும் கட்டணங்கள் நீதியின் பேரால் வசூலிக்கப்படுவது நியாயமானதல்ல! யாருடைய நலன்களில் அக்கறை காட்டுவதற்காக ராஜ்ய அரசுகள் இருக்கின்றனவோ, அந்த சாதாரண மனிதர்களால், நீதிபெறுவதற்காக இவ்வளவு பெருந் தொகை தர முடியாது; அப்படி அவன் நீதி பெற, முயன்று அவன் கடன் வாங்க வேண்டும்— அல்லது ஏதேனும் குற்றம் புரிந்து பணம் தேட வேண்டும்."

இது பற்றி நீதிபதி மகாஜன், அமெரிக்க நாட்டின் பெயரால் நிலவுகிற சாதாரணமான கோர்ட் கட்டணங்களை உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

கிராம மக்களுக்கு அவர்கள் வதியும் கிராமத்திலேயே நீதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக, 'நடமாடும் நீதி மன்றங்க'ளிருவும், கணம் கட்ஜூவின் யோசனையை, நீதிபதி மகாஜன் ஏற்றுக் கொள்ளவில்லை.

"இதனால் செலவு அதிகமாவதுடன தவறுகள் பல நிகழ்வதற்கு ஏதுவாகவும் வழக்குகள் திறம்பட நடத்த முடியாமலும் போய்விடக் கூடும்" என அவர் கருதுகிறார்.

'சம்மன்'கள் அனுப்பும் நடைமுறையை விரிவுபடுத் துவதிலும் அவர் சாதகமாயிருக்கவில்லை.

அவர் மேலும் கூறுவதாவது:-

"அத்தகு சீர்திருத்தங்கள், நீதிக்கு மதிப்புத் தரும் உள்ளம் கொண்ட நீதிபதிகள் இருந்தால்தான் இடம் பெற இயலும். நான் அஞ்சுகிறேன்—இப்போதுள்ள பெரும்பாலான நீதிபதிகள் நீதியில் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் நிர்வாகத்தில்தான் நோக்கமுடையவர்களாயிருக்கிறார்கள்.

"கோடை விடுமுறையில் பல மாவட்ட நீதி மன்றங்களை பார்த்தேன்; பல மாஜிஸ்திரேட்டுகள் எப்படியாவது போலீசார் கொண்டுவரும் வழக்குகள் வெற்றி பெறுவதிலேதான் கவனம் செலுத்துகின்றனர். போலீசார், நீதிபதிகளுடன் கொள்ளும் தொடர்பால் நீதிபதி வசப்படுத்தப்பட்டு, ஒரு வழக்கைப் பற்றி போலீசார் சொல்லும் உண்மையையோ, பொய்யையோ ஏற்றுக் கொள்கிறார்களேயன்றி, வழக்கை தீர விசாரித்து ஒரு நியாயமான முடிவுக்கு வர வேண்டுமென எண்ணுவதில்லை."

பஞ்சாயத்துக்களிடம் நீதிபரிபாலனத்தைத் தருவதுபற்றி நீதிபதி மகாசன், கூறுவதாவது:—

"சில ரூபாய் அபராதம் விதிக்கக்கூடிய சில வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை மட்டுமே பஞ்சாயத்துகளிடம் தரலாம்; இந்த முறை சிறிது காலம் அமுல் நடத்தப்பட்டு ஆராயப்பட வேண்டிய ஒன்று; மேலும், பஞ்சாயத்துகளின் அதிகாரங்களை அதிகரிக்குமுன்னால் இது செய்யப்பட வேண்டும்."

மன்றல் அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 1985-ஆனித் திங்கள் 23-ம் நாள (7–7–54) புதன்கிழமையன்று காலை 9-மணிக்குச் சென்னை கோகலே மண்டபத்தில், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமையின்கீழ் யாம் வாழ்க்கைத் துணைவர்களாக உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் மன்றல் விழா ஏற்பாடு செய்துள்ளபடியால் தாங்கள் விழாவிற்கு வருகைதந்து எம்மை மகிழ்விக்க வேண்டுகிறோம்.

தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி அறிவுரை ஆற்றுவார்கள்.

இங்ஙனம்,
க. மாதையன்,
ச. இராஜேஸ்வரி

சென்னை }
4—7—54 }

திருமணங்கள்

8—7—54 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நாசிங்கபுரம் (ஆத்தூர்வட்டம் சேலம்) தி மு க. செயலாளர் என். எஸ். கோவிந்தசாமி சகோதரி தோழியர் லட்சுமிக்கும்—செயற்குழு உறுப்பினர் தோழர் என். கே. கணபதிக்கும் தோழர் அருணாசலம் தலைமையில் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும். தோழர்கள் ரெங்கசாமி, என். கே. ராசு சிறப்புரை வழங்குவர்.

* * *

தோழர் கே. செங்கோடன் பி. ஏ,—தோழியர் பார்வதி திருமணம் 8—7—54 காலை 8 மணியளவில் அருங்கிப்பட்டி (சேலம்) யில் திரு. தேவராய பாவலர் தலைமையில் நடைபெறும் தோழர் க. அன்பழகன் 'தமிழர் திருமணம்' என்பது பற்றிப் பேசுவார்.

• • •

8—7—54 காலை 8 மணியளவில், பொன்மலை மேலக்கற்கண்டார் கோட்டை மணமகன் இல்லத்தில், திரு ஐ முருகேசனார் தலைமையில் தோழர் மு மாணிக்கம்—தோழியர் இளஞ்சியம் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், அம்பில்—தர்மலிங்கம், டி. பராங்குசம் சிறப்புரை வழங்குவர்.

கழகக் கூட்டம்

★

மேச்சேரி

8—7—54 வியாழன் மாலை

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

இலக்கியச் சொற்பொழிவு

★

8—7—54 மாலை 6 மணிக்கு

இடம்: பார்க் டவுன், மெமோரியல் ஹால்

தலைவர்:
தோழியர் எஸ். கௌதமி

சொற்பொழிவாளர்:
தோழர் இரா. நெடுஞ்செழியன்

தலைப்பு: கம்ப ராமாயணம்?

—தோழமைக் கழகம்

என். வி. நடராசன்,

சுற்றுப்பயணம்

ஜூலை 8: மேலமூங்கிலடி
10, 11: சிதம்பர் மாவட்ட மாநாடு

தஞ்சை மாவட்டம்:

ஜூலை 12: காளி
13: வலத்தங்குடி
14: தேரிழுந்தூர்
15: நத்தம்
16: சோழன்பேட்டை
17: விளநகர்
18: மாயூரம்
20: மாதானம்

உலக அரங்கில்...

லண்டன்:

ரூபன் கால்வாய் பற்றிய ஆங்கிலோ - எகிப்திய பேச்சு வார்த்தைகள் சீக்கிரமே மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா அமைச்சர் செல்வின் லாயிட் காமன்ஸ் சபையில் கூறினார்.

குவாட்டிமாலா:

குவாட்டிமாலாவில் ஏற்பட்டிருக்கும் புதிய சர்க்காரை எல் சால்வேடார் குடியரசு அங்கீகரித்துள்ளது. குவாட்டிமாலா புதிய சர்க்காரை அங்கீகரிக்கும் முதல் நாடு, எல் சால்வேடார்தான்!

போர்ட்லண்டு

அமெரிக்க ஜனநாயகக் கட்சித் தலைவரான அட்லாய் ஸ்டீவன்சன், 'சீனா ஐ. நா. சபையுடன் சேர்க்கப்பட்டால் அமெரிக்கா அச்சபையிலிருந்து வெளியேற வேண்டுமென்று கூறுவது தவறு; அது அமெரிக்காவுக்கு ஆபத்தை விளைவிக்கும் போக்கு,' என்று கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு (24, குள நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.